

மதுரை வடக்கு மாவட்டம் மேலூரில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மேலூர் நகராட்சி தி.மு.க. நகர்மன்ற உறுப்பினர் ஆர்.ரிஷி ஏற்பாட்டில் பத்தாயிரம் பேருக்கு அசைவ உணவு வழங்கும் விழாவினை துவக்கி வைத்தார். விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினர் கரு தியாகராஜன் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றார்கள்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# மதுரை வடக்கு மாவட்டத்தில் 1.50 லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க ஏற்பாடு!

## அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!



*மதுரை, நவ.28-*

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் 1.50 லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்

மதுரை திருப்பாலையில் தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வழங்கப்பட உள்ள நலத்திட்ட உதவிகளுக்கான பொருட்களை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த போது தமிழ்நாடு துணை முதல்வர் திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினின் அவர்களின் 47 வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் அனைத்து ஒன்றிய, நகர, பகுதி கழகங்கள், வட்ட கழகங்கள், பேரூராட்சி, ஊராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்து பகுதிகளிலும் நலத்திட்டங்கள் வழங்க முடிவு செய்து அதன்படி 1.50 லட்சம் பேர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. முதற்கட்டமாக இன்று மதுரை மேலூரில் பத்தாயிரம் பேருக்கு உணவு வழங்கப்படுகிறது.

அதேபோல் வருகிற 27 ஆம் தேதி கோவில்கள், முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள் உள்ளிட்ட பல பகுதிகளில் அந்தந்த பகுதி கழக நிர்வாகிகள் வைத்து சுமார் 19 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

மேலும் மறுநாள் 28ந்தேதி முதல் தொடங்கி ஒரு மாத காலத்திற்கு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் சுமார் 1.50 லட்சன் பேர்களுக்கு வழங்கப்படும் என்றார், மேலும் மதுரை கிழக்கு தொகுதி தன்நிறைவு பெற்ற தொகுதியாக மாறி வருகிறது, விரைவில் எஞ்சிய பகுதிகளுக்கும் பாதாள சாக்கடை அமைக்க பூமி பூஜையுடன் பணிகள் துவங்க உள்ளது, அதேபோன்று மதுரை மாவட்டம் முழுவதும் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக மாறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும், மேலும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு முன்னதாக திமுக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் தமிழக முதல்வரின் எண்ணத்தின்படி எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பொதுமக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

அமைச்சர் பேசிய போது மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் சிறைச்செல்வன், மதிவாணன், பகுதி செயலாளர்கள மருது பாண்டியன், சசிக்குமார், பாண்டியராஜன், கவுரிசங்கர், அணிகளின் அமைப்பாளர்கள், வீரராகவன், ஜான், மாமன்ற உறுப்பினர்கள் திருப்பாலை ராமமூர்த்தி, துரைப்பாண்டி, பாபு, செல்வகணபதி, செங்கிஸ்கான், வட்டச் செயலாளர்கள் மணிராஜ், பாலகிருஷ்ணன் உள்ளிட்ட திரளானோர் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திண்டுக்கல் அரசு கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 14 குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை கழக துணைப் பொதுச் செயலாளர், அமைச்சர் இ.பெரியசாமி வழங்கினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் பிலால்உசேன், மாநகர செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதிஜோதிபிரகாஸஷ், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை ஆகியோர் உள்ளனர்.

### நெல்லை மாநகர தி.மு.க. சார்பில்

# துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## டி.பி.எம்.மைதீன்கான் - மு.அப்துல் வகாப் - சு. சுப்பிரமணியன் பங்கேற்பு!

*நெல்லை, நவ.28-*

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாள்,இளைஞர்களின் எழுச்சி நாளாக கொண்டாடும் வகையில்

நெல்லை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கழக சொந்தங்கள் 1048 நபர்களை கௌரவிக்கும் விழாவாக

வருகிற 04.12.2024 அன்று மாலை 4 மணி அளவில் நெல்லை கண்ணன் சாலை டவுண் பார்வதி தியேட்டர் அருகில் இந்நிகழ்வு நடைபெறும், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப்,பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை)அன்டன் செல்லத்துரை(பாளை) சாகுல் ஹமீது (மேலப்பாளையம்)துணை செயலாளர் கள் அப்துல்கையூம்,பாலமுருகன் என்ற பிரபு,சுதா மூர்த்தி, பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை,மாநில சட்ட திட்ட தீர்மானக் குழு உறுப்பினர் சுப. சீதாராமன்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பேச்சிபாண்டியன்,ஏ.எல்.எஸ்.லெட்சுமணன்,மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், மாவட்டக் கழக நிர்வாகிகள் முருகன்,எஸ்.வி.சுரேஷ், தர்மன்,கிரிஜா குமார், வண்ணை சேகர், மானூர் ஒன்றிய செயலாளர்கள் மாரியப்பன் (தெற்கு) அருள்மணி (கிழக்கு)அன்பழகன் (மேற்கு) ஒன்றிய பொறுப்பாளர் வேலங்குளம் கண்ணன்(பாளை வடக்கு)பேரூர் கழக செயலாளர்கள் செல்வபாபு(சங்கர் நகர்)பேச்சிகுட்டி (நாரணம்மாள்புரம்)நெல்லை மத்திய மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையாபாண்டியன்,27 ஆவது மாமன்ற உறுப்பினர் உலகநாதன், மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான்,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாக துறை அமைச்சர், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் ஆகியோர் பங்கேற்று நெல்லை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழக சொந்தங்கள் 1048 நபர்களை கௌரவித்து தலா ரூபாய் 6000 மதிப்பிலான மிக்ஸியை வழங்குகின்றனர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மாநில நெசவாளர் அணி துணை செயலாளர்,பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர்,நெல்லை தொகுதி பார்வையாளர் ச.முத்துச்செல்வி,

தலைமை கழக பேச்சாளர்கள் சிவாஜி ஜெ.கிருஷ்ணமூர்த்தி,கவிஞர் மூர்த்தி, நெல்லை முத்தையா, திராவிட மணி சி.பா.ராவணன், நெல்லை ரவி,பாம்பு கிருஷ்ணன்,நெல்லை மணி,மில் குமார்,

கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களால் கழகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இளம் பேச்சாளர்கள் செல்வி.ரகுமாள்,அகமது சுல்தானா, அர்ஜனா உட்பட நெல்லை பேட்டை பகுதி,தச்சை பகுதி,பாளை பகுதி, மேலப்பாளையம் பகுதி,கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்,மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தொண்டர்கள், மூத்த முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர். நிகழ்ச்சி நிறைவில் நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி நன்றியுரை யாற்றுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் செய்துள்ளார்.

### துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# தென்காசி தெற்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## பொ.சிவபத்மநாதன் பங்கேற்பு!

*தென்காசி, நவ.28-*

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தென்காசி தெற்கு மாவட்ட அவைத்தலைவர் மாவடிக்கால் எஸ். சுந்தரமகாலிங்கம் ஏற்பாட்டில் மேலக்கடையநல்லூர் 30 வது வார்டு கணேசன் மகன் நடராஜனுக்கு புதிய வீடு கட்டி அன்பளிப்பாக கொடுக்கும் நிகழ்வு,1000 ம் பேர்களுக்கு வேட்டி,சேலை மற்றும் இஸ்திரி பெட்டி உள்பட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மேலகடையநல்லூர் நாகம்மாள் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ. சிவபத்மநாதன் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் கனிமொழி,பொதுக்குழு உறுப்பினர் சாமிதுரை,முன்னாள் ஒன்றிய செயலாளர் காசி தர்மம் துரை மாவட்ட நெசவாளர் அணி மூவன்னா மசூது,மாவட்ட சிறுபான்மை பிரிவு விஸ்வா சுல்தான்,மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முகம்மது அலி மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் யாத்ரா பழனி,முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் லிங்கராஜ்,தலைமைக் கழக பேச்சாளர்கள் இஸ்மாயில்,முத்துசாமி, முத்துவேல்,காசி,பேரூர் செயலாளர்கள் ஜெகதீசன்,விமலா ராணி,பேரூராட்சி மன்ற தலைவர்கள் சுதா மோகன்லால், காளியம்மாள்,செல்வக்குமார்,மாவட்ட பிரதிநிதிகள் சுந்தரம் என்ற சேகர், ஸ்டீபன் சத்யராஜ்,வேல் ஐயப்பன், அரிகிருஷ்ணன், உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்ற மாவட்ட தலைவர் ஈஸ்வரன்,காளிராஜ், கண்ணன், ரத்தின சாமி,பரமசிவன், 30 வது வார்டு நிர்வாகிகள் வேத முத்து,மாரி, சுடலைக் கண்ணு, சுப்பையா, ஹரி தாஸ், ராமச்சந்திரன், ஆறுமுச்சாமி, சந்தோஷ் குமார், அசன், தொ.மு.ச.செல்வகுமார் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மாவட்ட அவைத்தலைவர் சுந்தர மகாலிங்கம் அன்பளிப்பாக வழங்கிய நடராஜன் இல்லத்தை தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்து அவரிடம் சாவியை வழங்கினார்.



மதுரை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பரங்குன்றத்தில் பெண்களுக்கான பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு அதில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு தங்கத்தோடுகள், டிவி, மிக்ஸி உள்ளிட்ட பல்வேறு பரிசு பொருட்களும் பங்கேற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு நினைவு பரிசுகளையும் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இன்பா, ஏ.என்.ரகு ஆகியோர் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வி.விமல் ஏற்பாட்டில் வழங்கிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் கிருஷ்ண பாண்டியன், உசிலை சிவா, ஏர்போர்ட் பாண்டியன், கொம்பாடி தங்கம், செல்வம், இந்திரா காந்தி, ம.முத்துராமலிங்கம், முருகன், நாகலிங்கம், செல்வேந்திரன், உலகநாத பாண்டியன், பிரமிளா, சுவிதா விமல், தென்பழஞ்சி சுரேஷ், ஜெகநாதன், காளிதாஸ், ஆதவன் அதியமான், ஜெகதீஷ், சாதிக் முகைதீன், ராஜதுரை, பேச்சாளர் கவிஞர் மற்றும் திரளான பெண்கள், கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர், கழகத்தினர் பங்கேற்றனர்.

### தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

## விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியம், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் வேட்புமனு தாக்கல்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விருதுநகர் தெற்குமாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியத்தின் மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரா.அப்பணசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டைதெற்கு ஒன்றியம் மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, நவம்பர் 28 (வியாழக் கிழமை)அன்று ரூ.1000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தகுதிவிவரம்**

ஒன்றியக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்பு மனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த ஒன்றியத்திற்கு கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைச் செயலாளராகவோ, பேரூர்ச் செயலாளராகவோ, ஒன்றியப் பிரதிநிதியாகவோ இருத்தல வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்திபெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் கழக இளைஞரணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.ஜெயராமன் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கழக இளைஞரணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் கழகக்கொடிஏற்றி இனிப்பு வழங்கினார். காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் என். குணசேகரன் தலைமையில் செயற்குழு உறுப்பினர் மேயர் எஸ்.முத்துதுரை முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.